# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மொனறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய
## (கூட்டிணைத்தல்)

**மொனறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமயவைக்**
**கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கனக ஹேரத்*
*அவர்களால் 2011, மாச்சு மாதம் 09 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, பெப்புருவரி மாதம் 14 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **96 ஆம் சட்டமூலம்** ]


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 005515 -350 (2011/02)

## மொனறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்)

## மொனறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமயவைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

**முன்னுரை.**

"மொனறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் குறிக்கோள்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டு நடாத்தும் நோக்கத்திற்காக இதற்கு முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன் சொல்லப்பட்ட சங்கம் எப்பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும் அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**சுருக்கப் பெயர்.**

**1.** இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின்   ஆம் இலக்க, மொனறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**மொனறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமயவைக் கூட்டிணைத்தல்.**

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் "மஹா சங்கமய" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மொனறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) "மொனறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய" எனும் பெயரின்கீழும், மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதோடு, அது அப்பெயர்

2-PL 005515-70 (2011/02)

கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், விரும்பியாங்கு அதனை மாற்றவும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) மொனறாகல மாவட்டத்தில் மகளிர் அமைப்புக்களின் கூட்டமைப்பாக செயலாற்றுதல் ;

(ஆ) மகளிர் மற்றும் சிறுவர்கள் பற்றிய தகவல் நிலையமொன்றைப் பேணிவரல் ;

(இ) மகளிர் நோக்குகின்ற சகலவிதமான இன்னல்களின் போதும், கணவனை இழப்பதனால் எதிர்நோக்குகின்ற நிர்க்கதி நிலைமைகளின் போதும் உதவுதலும் இடையீடு செய்தலும் ;

(ஈ) மகளிர் கருமங்களுக்கான நம்பிக்கைப் பொறுப்பு நிதியமொன்றைத் தாபித்தல் ;

(உ) மகளிரை அரசியல் ரீதியான விழிப்புணர்வுடையோராக மாற்றுதலும் பிரதேச வளங்களின் முகாமைத்துவத்தின் போது பிரதிநிதிகளாக மாற்றுதலும் ;

(ஊ) மகளிரை சிறுகுழுச் செயற்பாட்டில் சேமிப்புக் கடன் கொடுக்கல், வாங்கல் கலாசாரத்தில் முனைப்பாக பங்கேற்கச் செய்வித்தல் ;

(எ) உதவி தேவைப்படுகின்ற குறைந்த வருமானம் பெறுகின்ற மகளிருக்கு அவசியமான சுயதொழில் உதவிகள், கடன், கருவிகள், ஆடை அணிகள் மற்றும் பிற நிதியுதவிகளை வழங்குதல் ;

(ஏ) வறிய மகளிருக்கு அவசியப்படுகின்ற வேளைகளில் சட்ட உதவிகளையும் சட்ட ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள உதவுதல் ;

(ஐ) உள மற்றும் உடல் ரீதியான பலவீனங்களால் அல்லற் படுகின்ற மகளிருக்கும் முதிய பெண்களுக்கும் உதவி களை வழங்குதலும் நலன்புரி வசதிகளை வழங்குதலும்;

(ஒ) நூல்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித் தாள்கள் மற்றும் பருவகால சஞ்சிகைகளை அச்சிடல், பிரசுரித்தல், விநியோகித்தல் மற்றும் நூல்நிலையங் களைத் தாபித்தலும் பேணிவருதலும் ;

(ஓ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை மேம்படுத்து வதற்கும் ஈடேற்றுவதற்கும் அவசியமானதென கூட்டுத் தாபனம் கருதுகின்ற கண்காட்சிகள், கலந்துரையாடல் கள், பயிற்சி செயலமர்வுகள், விவாதங்கள், சுற்றுலாக் கள் முதலியவற்றை மேம்படுத்தல், ஏற்பாடு செய்தல் அத்துடன் பேணிவருதல் ;

(ஔ) மகளிரது திருமண, மரண சடங்குகளுக்கு அவசியமான உபகரணங்களையும் நலன்புரி வசதிகளையும் வழங்கு தல் ;

(க) மகளிர் எதிர்நோக்கும் பலவிதமான இன்னல்களின் போது நிவாரணம் அளிக்கும் பொருட்டு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுதல் ;

(ங) மகளிரது, சிங்கள, ஆங்கில, தமிழ் மொழி அறிவு, கணினி அறிவு மற்றும் தொழிற்றுறை அறிவினை விருத்தி செய்ய அவசியமான கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களைப் பேணி வருதல் ; அத்துடன்

(ச) கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை நிறைவேற்று வதற்குத் தேவையான அல்லது சாதகமாக அமைகின்ற அல்லது இடைநேர்விளைவான ஏதேனும் கருமத்தையும் ஏனையவற்றையும் ஈடேற்றல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தினதும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டதாக கீழே குறிப்பிடப்பட்ட தத்துவங்களையும் உள்ளடக்கியதாகக் கூட்டுத்தாபனத்தின் எல்லாக் குறிக்கோள்களையும் அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும் புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் பணிகளுக்கு அவசியமாகின்ற ஏதேனும் அசைவற்ற ஆதனங்களைக் கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுதல், ஈடுவைத்தல், பிணையாகப் பெறல், விற்றல், கொடுத்துமாற்றல் அல்லது வேறு வகையில் கையாளல், பொறுப்பித்தல் அல்லது கையளித்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்காகவும் அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காகவும் அவசியமாகக் கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஒன்றில் நேரடியாக அல்லது கூட்டுத்தாபனத்தினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் உத்தியோகத்தர் அல்லது முகவர் மூலமாகச் செய்துகொள்ளலும் அமுலாக்கலும் ;

(இ) காசாகவோ அல்லது வேறு வகையிலான கொடைகள், அன்பளிப்புகள் அல்லது வெகுமதிகளைக் கோருதல், பெற்றுக்கொள்ளல் அத்துடன் சேகரித்தல் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிதியங்களை முதலீடு செய்தல் மற்றும் வங்கியொன்றில் நடைமுறை வைப்புக்களையும் சேமிப்புக் கணக்குகளையும் பேணிவருதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் பணிகளுக்கு அவசியமான பணத்தை கூட்டுத்தாபனத்தினால் பொருத்தமானதென குறிப்பிடப்படுகின்ற விதத்திலும் அவ்வாறு பொருத்தமானதென கருதப்படுகின்ற பிணையின் மீதும் கடனாகப் பெறுதல் அல்லது முதலீடு செய்தல் ;

(ஊ) புத்தகங்கள், பருவகால வெளியீடுகள், சஞ்சிகைகள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பிரசுரித்தல் அல்லது பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நூல்நிலையங்கள், புத்தகக் கடைகள் மற்றும் அச்சகங் களை நிறுவுதலும் பேணி வருதலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அமுலாக்கு வதற்கு அவசியமான உத்தியோகத்தர்களையும் பணியாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்து தல், இடமாற்றம் செய்தல், அவர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு, அவர்களின் சேவை விதிகளையும் நிபந்தனைகளையும் விதித்தல் மற்றும் பதவி நீக்கஞ் செய்தல் ; அத்துடன்

(ஏ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அமுலாக்குவதற்கும் ஈடேற்றுவதற்கும் அவசியமாகின் றதும் இடைநேர்விளைவான அல்லது சாதகமானதாக அமையக்கூடிய எல்லாச் செயல்களையும் கருமங்களை யும் புரிதல்.

கூட்டுத்தாபனத்தின் பணிகளை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் பணிகளுக்காக நிறைவேற்றுத் தலைவர், தலைவர், செயலாளர், பொருளாளர், நிர்வாகச் செயலாளர், அமைப்பாளர்கள் பதினொரு பேர், பிரதேச சங்கங்களின் நிருவாகச் செயலாளர்கள் பதினொரு பேர்களை உள்ளடக்கியதாக கூட்டுத்தாபனத்தில் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு அமைவாக தெரிவுசெய்யப்படுகின்ற இருபத்தேழு பேருக்கு மேற்படாத எண்ணிக்கையுடைய உறுப்பினர்களைக் கொண்ட நிறைவேற்றுச் சபையினால் இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கும் கூட்டுத்தாபனத்தில் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கும் அமைவாக முகாமைத்துவம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) மஹா சங்கத்தின் தொடக்க அங்கத்தவரான கௌரவ அமைச்சர் திருமதி சுமேதா ஜீ ஜயசேன நிறைவேற்றுச் சபையின் முதலாவது நிறைவேற்றுத் தலைவராதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுச் சபை இச்சட்டம் அமுலுக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று நிலவிய மஹா சங்கத்தின் பதவிதாங்குநர்களான உறுப்பினர் களை உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6**. (1) கூட்டுத்தாபனத்தின் பொதுக் கூட்டமொன்றில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மை கொண்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத விதிகளைக் காலத்திற்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) நிறைவேற்றுச் சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்தல், நியமித்தல் அல்லது பெயர் குறித்தல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், பணிகள் மற்றும் பதவிக்காலம் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு உத்தியோகத்தர்களின், பிரதிநிதிகளின் மற்றும் பணியாளர்களின் தத்துவங்கள், நடத்தை, கருமங்கள் மற்றும் பணிகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தினதும் முகாமைத்துவக் குழுவினதும் கூட்டங்களுக்கான அழைப்பு விடுக்கும் போதும், நடத்தும் போதும் கடைப்பிடிக்க வேண்டிய நடவடிக்கை முறை, கூட்டம் நடத்தும் நேரங்கள், இடம் மற்றும் கூட்டம் பற்றிய அறிவித்தல், நிகழ்ச்சி நிரல், கூட்டத்திற்கான கூட்டநடப்பெண மற்றும் கூட்ட நடவடிக்கைகளைப் பேணிவருதல் ;

(ஈ) கூட்டுத்தாபன முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர்களுக்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(உ) கூட்டுத்தாபன ஆதனங்களின் நிருவாகம் மற்றும் முகாமைத்துவப் பொறுப்பு, அதன் நிதியம் மற்றும் கணக்குகளைப் பேணிவருதலும் கணக்காய்வும் ; அத்துடன்

(ஊ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் பணிகளை முகாமைத்துவம் செய்தலும் அதன் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) (1) ஆவது உப பிரிவின்கீழ் ஆக்கப்படுகின்ற ஏதேனும் விதியை அதே போன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தியமைக்கலாம், மாற்றலாம், அதனோடு எதனையும் சேர்க்கலாம் அல்லது அதனை நீக்கலாம்.

(3) இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு நேர்முந்திய நாளன்று அமுலில் இருந்த மஹா சங்கத்தின் விதிகள், இச்சட்டத்தின் அல்லது வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகும் வரை இப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படல் வேண்டும்.

(4) கூட்டுத்தாபனத்தின் எல்லா அங்கத்தவர்களும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கு கட்டுப்படல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.

**7**. தலைவர், நிருவாகச் செயலாளர் அல்லது பொருளாளர் ஆகிய இருவரில் ஒருவரது முன்னிலையில் அன்றி கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதமான சாசனத்திலும் பொறிக்கப்படலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களின் பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்வாறு கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியமாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படற்பாலனவும் சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

**8**. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மஹா சங்கத்துக்குரிய எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சங்கத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

**9**. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தாலும் அதன் சார்பிலும் பெற்றப்பட்ட மற்றும் இனிமேல் பெறப்படுகின்ற அன்பளிப்புகள், இறுதி விருப்பாவணக் கொடுப்பனவுகள்,

கொடைகள், ஒப்பப்பணங்கள் அல்லது கொடைகள் கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படுகின்ற வங்கியொன்றில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வைப்பிலிடப்படல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழ் தனது தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் நடைமுறைப்படுத்துவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட செலவினங்களுக்கான எல்லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படல் வேண்டும்.

**10**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும். *கணக்காய்வும் கணக்குகளும்.*

(2) கூட்டுத்தாபனமானது கூட்டுத்தாபனத்தின் எல்லா வரவு செலவுகளினதும், சொத்துக்கள், பொறுப்புக்களினதும் வேறு எல்லாக் கொடுக்கல், வாங்கல்களினதும் சரியான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமை பெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது–

(அ) இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக உள்ளவரும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழை வைத்திருப்பவருமாகிய ஆளொருவர் ; அல்லது

(ஆ) அதன் வதிவிடப் பங்காளரொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட தொழில் புரிவதற்கான தகைமைச் சான்றிதழைக் கொண்டிருக்கின்றவர்களுமான பங்காளர்களைக் கொண்ட கணக்காளர் கம்பெனியொன்று,

எனப் பொருள்படும்.

*கலைப்பின் போது எஞ்சியுள்ள ஆதனங்கள்.*

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன் மேல் அதன் கடன்கள், பொறுப்புக்கள் அனைத்தையும் திருப்திப்படுத்திய பின்னர் ஏதாவது சொத்து எஞ்சியிருப்பின் அத்தகைய சொத்து கூட்டுத் தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. எனினும், அது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டிருக்கும் பிற நிறுவனம் அல்லது நிறுவனங்கள் சிலவற்றுக்கு, அந்நிறுவனத்தின் அல்லது அந்நிறு வனங்களின் உறுப்பினர்களிடையே ஏதாவது வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் விதிகள் மூலம் தடுக்கப்பட்டிருப்பின், கொடுக்கப்படுதல் வேண்டும் அல்லது கைமாற்றப்படல் வேண்டும். கூட்டுத்தாபனம் கலைக் கப்படுகின்ற வேளையிலோ அதற்கு முன்னராகவோ கூட்டுத்தாப னத்தின் அங்கத்தவர்களால் அத்தகைய நிறுவனம் அல்லது நிறுவனங்கள் பற்றித் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் இலங்கை குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் கூட்டி ணைக்கப்பட்ட குழுவினதும் உரிமைகளையேனும் பங்கப் படுத்துதலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்